மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குற்றாலத் தல புராணத்தில் இயற்கை

## Nature in the Tirukkutaala Thala Puranam

பா.வேலம்மாள்/ P. Velammal[1]
[1]உதவிப்பேராசிரியர், இராணிமேரி கல்லூரி
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குற்றாலத் தல புராணத்தில் காணக்கிடக்கும் இயற்கையை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, திருக்குற்றாலத் தல புராணத்தில் காணக்கிடக்கும் இயற்கையை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு திருக்குற்றாலத் தல புராணத்தில் இயற்கையைஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** திருக்குற்றாலத் தல புராணம், இயற்கை

**Abstract**

The major objective of the research is to explore nature in the Tirukkutaala Thala Puranam. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the nature in the Tirukkutaala Thala Puranam. The research claims to be the first such attempt to do a study regarding the nature in the Tirukkutaala Thala Puranam.

**Keywords:** Nature, Tirukkutaala Thala Puranam

**முன்னுரை**

இயற்கையால் உருவாக்கப்பட்டதே இந்த உலகம். இந்த உலகத்தில் உள்ள மக்கள் இயற்கையை தமது வாழ்வின் ஒரு அங்கமாகவே வைத்து போற்றி வருகின்றனர். இயற்கை இறைவனால் படைக்கப்பட்ட எழில் களஞ்சியம். மனிதனை வடிவமைக்கும் அழகின் இருப்பிடம். ஆற்றலின் உறைவிடம், இயற்கையின் வழி கிடைக்கும் நன்மைகள் இல்லையெனில் மனிதன் வாழ முடியாது. இயற்கையினை திருக்குற்றாலத் தல புராணத்தில் திரிகூடராசப்ப கவிராயர் எங்ஙனம் கொண்டாடி இருக்கிறார் என்பதைக் காண்பதே இவண் நோக்கம்.

**ஆய்வு நெறி முறைகள்**

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பகுப்பாய்வு**

மேலகரத்தைச் சார்ந்த திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பல்வகைச் சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார். இவர் பதினெட்டாம் நூற்றாண்டுப் புலவர். இவர் வாழ்ந்த காலத்தில் கோவை, அந்தாதி, உலா, பதிகம் போன்ற சிற்றிலக்கியங்களைப் படைத்த பல புலவர்கள் திருநெல்வேலிப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். அந்த மரபில் வந்தவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் கிட்டத்தட்ட பதினான்கு சிற்றிலக்கியங்களை குற்றாலநாதர் மேல் பாடியுள்ளார். பதினான்கு நூல்களிலும் மிகச் சிறப்பானதாக திருக்குற்றாலக் குறவஞ்சியாரும், இது தவிர திருக்குற்றாலத் தல புராணம், திருக்குற்றால உலா, திருக்குற்றால யமக அந்தாதி, திருக்குற்றால மாலை, திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை, திருக்குற்றால ஊடல், திருக்குற்றால சிலேடை வெண்பா, திருக்குற்றாலக் கோவை, நன்னகர் வெண்பா, திருக்குற்றாலக் கோமளமாலை, திருக்குற்றாலக் குழல்வாய் மொழிமாலை, திருக்குற்றால வெண்பா அந்தாதி, திருக்குற்றாலப் பிள்ளைத்தமிழ்.

இந்தியாவின் மிகப் பழைய இலக்கியங்களை வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வேத காலத்திற்கு முன்பே புராணங்கள் கதை வடிவத்தில் வழங்கி வந்திருக்கின்றன. புராணம் என்ற சொல்லுக்கு மிகப் பழமையான வரலாறு என்பது பொருள். எது மிகப் பழைய காலத்தில் இருந்து இன்று வரைக்கும் மக்களிடத்தில் பரவி வாழ்ந்து வருகிறதோ அதைப் புராணம் என்று கூறலாம். தமிழில் புராணம் இருந்திருக்கிறது என்பதனை தொல்காப்பியம் கூறும் 'தொன்மை' என்ற சொல்லால் உணர முடியும்.

தமிழ்நாட்டில் புராணங்கள் என்றால் தலபுராணங்களே நினைவுக்கு வரக்கூடிய அளவிற்குத் தல புராணங்களுக்குச் சிறந்ததோர் இடம் உண்டு. கோவிலில் வழங்கும் கதைகளை வைத்துக்கொண்டு மக்களின் விருப்பதிற்கேற்ப புலவர்கள் புராணம் செய்தனர். குற்றாலநாதரை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட புராணமே திருக்குற்றாலத் தலபுராணம்.

திருக்குற்றாலத்தில் சிவபெருமான் குற்றாலநாதராக வீற்றிருக்கின்றார். இந்த இறைவனை மையமாகக் கொண்டு தானவைபவ காண்டம், சிவரகசிய காண்டம் என இருபெரும் பிரிவுகளாக இயற்றப்பட்டுள்ளது. இது பாயிரம் கடவுள் வாழ்த்து நீங்கலாகத் திருநதிச்சருக்கம் முதல் நூற்பயனுரைத்தச் சருக்கம் ஈராக 32 சருக்கங்களைக் கொண்டது.

இயற்கை என்ற சொல் பழந்தமிழில் ‘இயல்பு’ என்ற பொருளில் உள்ளது. மொழி வரலாற்றில் இச்சொல் பல்வேறு பொருளுடையதாக வளர்ந்தது. ‘இயற்கைக்கு செயற்கைக்கு மாறானது’ என்ற பொருளும் உண்டு. மனிதன் அல்லாத பிற அனைத்தும் இயற்கை; மக்கள் வாழ்வு இயற்கையோடு இயைந்தது. ஆடிவரும் தென்றலிலும், பாடிவரும் அருவியிலும், மணமிகு மலர்களிலும், கணந்தோறும் புதியபுதிய கோலங்காட்டும் வானத்தின் வண்ணத்திலும் ஈடுபடாத மனித மனம் இல்லை. கவிராயரின் பாடல்களிலும் இயற்கை சிறந்த இடத்தைப் பெறுகிறது.

திருக்குற்றால மலையில் உள்ள சித்ரா நதியானது அருவியாகப் பாய்கின்றது. இது அருவிகளுள் சிறந்ததாகும். இந்நதிக்கு சிவமது கங்கை என்ற பெயரும் உண்டு. இந்நதிப்பற்றி கவிராயர் திருநதி சருக்கம் முழுவதும் பாடியுள்ளார். சித்ரா நதியானது குறிஞ்சி, முல்லை, மருதம் போன்ற நிலங்களில் கடந்து நெய்தலாகிய கடலில் கலப்பதையும் அவ்வாறு செல்லும் பொழுது நான்கு நிலப் பொருட்களையும் கவர்ந்து சென்றதையும் கவிராயர் தம் பாடல்களில் அழகாக காட்டியுள்ளார். இந்த நதி முல்லை நிலத்து ஆயர்பாடியில் பெரிய பசுக்கூட்டங்களைத் தொடர்ந்துள்ளது. இம்மேகமானது வளைந்து அலை எனத் தாவி பத்து அவதாரங்களைக் கொண்ட செங்கண்ணையுடைய நெடிய மாயோனை ஒத்துக் காணப்படுகிறது. (திரு.நதி.சருக்கம் பா:8).

திருக்குற்றால நதியானது தூய தண்ணீர் பொருந்திய வெண்ணிறமுடையதாய் செல்லும்போது குமுத மலரின் செம்மையினையும், குவளையினுடைய கரு நிறத்தையும் பெற்றுச் செல்கின்றன. இதனை,

> “வெண்கமல மேவியுயர் வெண் படிக மணிந்து
> வெள்ள மேனி வாய்ந்து
> தன் குமுத வாய்ச்சிவப்புந் தடங்குவளைக்
> கண்கறுப்புந் தழைப்பத் தோன்றி”
> (திரு.நதி சரக்கம் பா:12).

திருநதியில் நீலோற்ப மலர் மிகுதியாகவும், அவற்றுக்கு இடைஇடையே தாமரை மலர்கள் மலரப்பெற்று கற்பகத்தரு நிழலில் பொருந்துகின்றன. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகை மலர்களும் சேர்ந்த அழகிய வெண்ணிற திருநதியாகிய பல மலர் மாலைகளையும் சுமந்து கொண்டு கடலாகிய செல்வ மகளோடு கலக்கின்றன.

தென்பாண்டி நாட்டு வருணனை திருநாட்டுச் சருக்கத்தில் கூறும்போது நால்வகை நிலங்கள் பற்றியும் பேசப்படுகின்றன. இந்திரு நாட்டு மலைகளில் மாமரம் பழுக்கும் போதெல்லாம் மலையே பழுத்து உதிர்வது போலக் காட்சியளிக்கிறது. சோலைகளில் பாக்குக் குலைகள் சிதறி, மூங்கில் ஏணி போன்று தோன்றுகிறது. மூங்கில்கள் மேலே உள்ள படிகளில் தேன் சொரியும் வளப்பம் உடையது.

"மாம் பழுக்கம் பொதும்பர் தொறு மலை பழுத்த தெனத் தோன்றி
காப்பழுக்காய்க் குலை சிதறிக் கண்ணேணிகடுத்த சினெ
மீர்பழுக்கண் மிசைத்தாவும் வெய்யவன் நேர்க்கால் வழுத்
தேப்பழுக்கு முயர் பெருமைத் திருவழுதி வளநாடு" (தி.நா.ச.பா.1)

மருத நிலத்தில் விதைக்கப்பட்ட விதையானது முத்துக்களைப் போல முளையைத் தோற்றுவிக்கின்றன. பொன்னைப் போல அரும்புகின்றன. பவளம் போல பயிர்கள் வளர்கின்றன. பச்சைக் கற்களைப் போலத் தோகை விரியச் செய்து நீலநிறம் மிகுந்த சிறப்பு உடையதாய் தோன்றுகின்றன. (மேலது பா.9).

"தேன்குளிக்குந் தேன் வாவி திரைக் குளிக்குந் தூவியனம்
கான் குளிக்கும் பசுந்தென்றல் கரை குளிக்கு மெறிதரங்கம்
மீன் குளிக்கும் புனல் யாறு குறிக்குங் கருமேதி
வான் குளிக்கும் விரிபாளை மடல் குளிக்கும் வரிவாளை" (மே.பா.26)

என்று முல்லை நில இயற்கைப் பேசப்படுகின்றது.

பாண்டிய நாட்டில் நால்வகை நிலங்கள் பற்றி கூறப்படுகின்றன. குறிஞ்சி நிலத்துத் தோட்டங்களில் விளையும் திணை முல்லை நிலத்து வரகுமேல் தம் கதிர்களை நீட்டுகின்றன. முல்லை நிலத்து விளையும் அவரை, துவரை முதலியவை மருத நிலத்தில் உள்ள நெல்வேலிகள் மீது தம் காய் கொத்துகளை நெருங்க வைகின்றன. மருத நிலத்தில் வயல்களின் கரைகளில் உள்ள வாழைகள் நிழலைச் செய்து தம் கீழ்க் கன்றுகளின் இலைகளை ஏற்றுதலில், கடற்கரையாகிய நெய்தல் நிலத்தில் விளையும் தாழை தன் மகரந்தமாகிய சோற்றைச் சொரிகின்றன. (மேலது பா:37).

"செய்காட்டுந் தாமரையாத் தேன் காட்டுங் கழுநீரா
மொய் காட்டு நறுந்தளவா முருகாட்டு மாந்தளிராக்
கைகாட்டி முகங்காட்டிக் கண்காட்டி நகை காட்டி
மெய்காட்டித் திருமடந்தை விளையாடுந் திருநாடு" (மேலது பா:5)

என்று இயற்கை முழுமையாக வருணைச் செய்யப்படுகின்றது.

திருகுற்றாலத்திலுள்ள வனத்தில் பெண் வண்டும், ஆண் வண்டும் இசைக்கின்ற இனிய இசையைக் கேட்டு மானும் வேங்கையும் தம் முன்பிறப்புப் பற்றிய பகையை மறந்து ஒரே இடத்தில் காட்டில் நடனம் புரிந்து நிற்கின்றனவாம்.

"தேனுந் தும்பியும் எடுத்த பண்ணிசை செவி மடுத்து
மானும் வேங்கையும் ஒருதலைத் துயல்வது மயில்கள்
கான நாடகம் பயிறரக் கான மா மறைகள்
ஞான யோகிகள் பயில்வது னறமிசாரணியம்" (பு.வ.சருக்கும் பா:17)

திருக்குற்றாலத்தில் வீசும் மந்த மாருதம் மிகவும் பெருமை உடையது, இதனை மிகுந்த இரசனையோடு, செண்பகவனத்தில் பிறந்து, அருவியில் நீராடி, மலர்களில் நறுமணம் பெற்று திருக்கோயிலினுள் தவழ்ந்து வரும் இந்த தென்றலைக் குழந்தை என்கிறார்.

குற்றால மலையின் உச்சியில் மூன்று சிகரங்கள் உள்ளதால் இம் மலைக்குத் திரிகூடமலை என்னும் பெயரும் உண்டு. இம்மலையில்,

"பந்தி பாயமுகில் பாய் மத மாவெனத்
தந்தி பாடிமத் தந்தியை வெற்பென
மந்தி பாயுமம் மந்திகள் பாய்தல் போல்
உந்தி பாயு முயர்வரைச் சார்பெலாம்" (திரிகூட ம.சரு.பா.:3)

மேகத்தை மதம் பிடித்த களிறு என நினைத்து யானை பாய்கிறது, அவ்யானையை மலையெனக் கருதி குரங்குகள் அது மீது தாவுகின்றன என்று விளக்குகிறார்.

வட அருவி மிகவும் புனிதமானது. மற்ற அருவியில் நீராடுபவர்களுக்கு அவர்களின் நினைப்புக்கு ஏற்றபடி யாதேனும் ஒரு பயனை அளிக்கும். ஆனால் வடஅருவி தன்னை எதிர்கொண்டோர், வணங்கினோர், நினைத்தோர், புகழ்ந்தோர் மற்றும் ஒருத்துளி நீரை முடியில் தெளித்துக் கொண்ட யாவருக்கும் சிவகதியைக் கொடுக்க வல்லது.

"ஆலை நறுங் கழை விர் தொட்டயிலவதெனக் காலை முதல்
வேலை மரை பினிற் கதிகள் வியந்து தவம் பல நதிகள்
காலையினு மலையினுங் கடும் பகலும் வடவருவி
பாலையடு கட்டி தருஞ் சுவைபோலப் பலன் தருமே"
(வடவருவி சருக்கம் பா:32).

குற்றாலத் தரப் புராணத்தில் மூங்கில், மருதமரம், பாக்கு, தென்னை, கரும்பு, வாழை, சந்தனம், நார்த்தை, அகில், அகடு, இடுப்பை, மகிழ்தேவதாரு, வன்னி போன்ற மரங்கள் பேசப்பட்டாலும் செண்பகமரம், மாமரம், பலாமரம் ஆகியன மிக சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

"வான ரம் பையின் மாவிற் பலவின்மேல்
வான ரம் பையின் மா மயில் யாழ் செய்
வான ரம்பையின் மா மயிலானுமே" (திரி.கூ.சரு.பா:15)

மயில், வண்டு, குயில், அன்னம், கிளி, நாரை, நாகணவாய்ப் பறவை, போன்ற பறவைகளும் குரங்கு, யானை, சிங்கம், காட்டுப்பன்றி, நீர்ஆமை, மீன், குதிரை, பசு, புலி, மான், முதலை, எருது, பாம்பு, நரி, முயல், காட்டுக்கோழி போன்ற விலங்குகளும் குற்றாலத் தலப் புராணத்தில் பேசப்பட்டுள்ளன.

**நிறைவுரை**

அன்றையக் காலத்தில் மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டுள்ளான். இயற்கை மனிதனால் போற்றப்படும் வகைகளில் ஒன்று. இன்று இந்த இயற்கை நலம் குற்றாலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துகொண்டே வருகிறது.

குற்றாலத் தலப் புராணத்தின் இயற்கைக் காட்சிகளைப் படித்தால் குற்றாலத்தின் பழைய வளமையைக் கொண்டு வந்தால் மனிதன் ஆரோக்கியமான வாழ்வு வாழலாம் என்பதை உலகுக்கு உணர்த்தலாம்.

**துணைநூற்பட்டியல்**


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971